මගේ අංකය
எனது இல.
My No.

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date.

2019.08.29

ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
**Human Rights Commission of Sri Lanka**

திரு. சந்தன டி. விக்ரமரத்ன
பதில் பொலிஸ் மா அதிபர்
பொலிஸ் தலைமையலுவலகம்
கொழும்பு 01

**2007இன் 56ஆம் இலக்க ICCPR சட்டத்தின் பிரிவு 3இன் நோக்கெல்லையினதும் மற்றும் இணைந்துள்ள வழிகாட்டல்களினதும் மீது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் (இ.ம.உ..ஆ.கு.) பகுப்பாய்வு**

2007இன் 56ஆம் இலக்க ICCPR சட்டத்தின் (ICCPR சட்டம்) பிரிவு 3இன் நோக்கெல்லையின் ஆணைக்குழுவின் சட்டப் பகுப்பாய்வினையும் மற்றும் ஏற்பாட்டின் பிரயோகம் தொடர்பில் அதன் பரிந்துரைகளையும் இதனகத்து முன்வைப்பதையிட்டு இ.ம.உ..ஆ.கு. மகிழ்ச்சியடைகின்றது.

வெறுப்பு உரையைத் தணிப்பதில் ICCPR சட்டத்தின் பிரிவு 3ஆனது முக்கியமான சட்டக் கருவியொன்று என்ற கருத்தினை ஆணைக்குழு கொண்டுள்ளது. நாம் அறிந்துள்ளவாறு, துரதிர்ஷ்டவசமான பலதரப்பட்ட குழுக்களை இலக்குப்படுத்தி நாட்டில் ஒரு பொதுவான தோற்றப்பாடாக வெறுப்புரை விளங்குகின்றது.

எனினும், ICCPR சட்டத்தின் பிரிவின் வினைப்படுத்தலானது இணங்குகின்ற தன்மையொன்றிலும், சமநிலையிலான தன்மையொன்றிலும் செய்யப்படவில்லை என ஆணைக்குழு கவனத்திற்கொள்வதுடன், சொல்லப்பட்ட ஏற்பாட்டினால் அடையாளங்காணப்பட்டுள்ள குற்றத்தின் சட்டபூர்வ நோக்கெல்லை மீது அளப்பரிய தெரிவுக்கான அவசியத்தையும் பார்க்கின்றது.

சர்வதேச சிவில், அரசியல் உரிமைகள் மீதான ஒப்பந்தத்தின் உறுப்புரை 20இன் நோக்கெல்லை மீது ஆணைக்குழுவின் ஆராய்ச்சியின் விளைவொன்றே இ.ம.உ..ஆ.கு.இன் சட்டபூர்வ பகுப்பாய்வினையும், பரிந்துரைகளையும் கொண்டுள்ள இணைக்கப்பட்டுள்ள ஆவணமாகும்.

அடிப்படை உரிமைகளின் துறையில் சட்டச் செயற்பாட்டாளர்களுடன் உசாவுகை நடத்திய பின்னரே பகுப்பாய்வும், பரிந்துரைகளும் முடிவாக்கப்பட்டன.

ICCPR சட்டத்தின் பிரிவு 3இன் நியாயமானதும், பயனுறுதிவாய்ந்ததுமான வினைப்படுத்தலுக்கு பொலிஸ் திணைக்களத்தினால் இந்த வழிகாட்டல்கள் கரிசனைக்கெடுக்கப்பட வேண்டும் என ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. ஆணைக்குழுவானது, தேவைப்படின் இது தொடர்பான விளக்கங்களை வழங்குவதன் நிமித்தம் மகிழ்ச்சயடைக்கின்றது.

HUdagama

தவிசாளர்
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு